# ஊர்காவற்துறை பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய ஊர்காவற்துறை பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி ஊர்காவற்துறை பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் செலவினம் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | பொறுப்புக்கள் | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| கணக்ககளில் அதிகரித்துக் காட்டல்கள் | 02 | 1,391,945 | 01 | 1,750,000 |
| கணக்குகளில் குறைத்தக் காட்டல்கள் | 01 | 3,776,909 | - | - |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 76,485 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 52,875,046 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணம். நிதிப்பிரமாணம் 103 | ரூபா 413,519 ஆன மின்சாரப் பொருட்களின் இழப்புக்கள் தொடர்பில் 02 ஆண்டுகளாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 1,541,737 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 2,420,741 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வாடகை மற்றும் வரிகள் | 02 | - | 143 | 02 | - | 143 |
| குத்தகை வாடகை | 1,272 | 1,448 | 60 | 1,065 | 1,186 | 60 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 116 | 205 | - | 116 | 84 | - |
| ஏனைய வருமானங்கள் | 20,623 | 16,671 | 60 | 4,062 | 16,180 | 60 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு நியதிச் சட்டங்களின் கீழ் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பட்டோலைகள் சபைக்கு கிடைத்திருக்கவுமில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 ஆம் ஆண்டிற்காகப் பெற்றப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அறவிடப்பட வேண்டிய வருமானம்

1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்கு விதிகளின் பிரகாரம் முன்னைய காலப்பகுதி தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 263,000 வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 16,021 | 12,982 | 3,039 | 15,180 | 12,770 | 2,410 |
| ஏனையவைகள் | 2,620 | 3,800 | (1,180) | 4,195 | 2,260 | 1,935 |
| உப மொத்தம் | 18,641 | 16,782 | 1,859 | 19,375 | 15,030 | 4,345 |
| **மூலதனச் செலவு** | 6,452 | 10,192 | (3,740) | 3,205 | 5,913 | (2,708) |
| முழு மொத்தம் | 25,093 | 26,974 | (1,881) | 22,580 | 20,943 | 1,637 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலை மட்டம் | 03 | 01 |
| இரண்டாம் மட்டம் | 20 | 14 |
| ஆரம்ப மட்டம் | 48 | 35 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 03 |
| மொத்தம் | 71 | 53 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாது மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| சொத்தின் தன்மை | பெறுமதி | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| | ரூபா | |
| அனலைத்தீவு மீன் சந்தை | 450,000 | ஒரு ஆண்டிற்கு மேலாக |
| இழுவைத்தீவு மீன் சந்தை | 240,000 | ஒரு ஆண்டிற்கு மேலாக |
| பிக்கப் வாகனம் - 252-6481 | 1,242,500 | ஒரு ஆண்டிற்கு மேலாக |

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,801,988 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 2,221,685 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,179,763 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 2,033,827 ஆகும்.

### 2.5.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையினால் பேணப்பட்டு வருகின்ற அறுவைக் கொட்டில்களிற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அறுவைக் கட்டளைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டவாறு அறுவைக் கொட்டில்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.5.5 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் நகர சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) கணக்கீடு

(ஈ) மோட்டார் வாகனக் கட்டுப்பாடு

(உ) மீளளிக்கத்தக்க வைப்புக்கள்